**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம். கடலாடி**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., B.Sc., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர். கடலாடி (மு.கூ.பொ)**

**2026 ஆம் வருடம் ஜுன் மாதம் 30ம் நாள் செவ்வாய்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 29/2022**
**CNR. NO.TNRM100004332022**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | சாயல்குடி காவல்நிலையம் குற்ற எண் – 291/2021 |
| 1ம் எதிரியின் விபரம் | | |
| 2. | பெயர் | நாகராஜ் |
| 3. | த/பெ. | வேலு |
| 4. | தொழில் | -- |
| 5. | முகவரி | மேலக்கிடாரம், கடலாடி தாலுகா |
| 6. | வயது | 25/2021 |
| 2ம் எதிரியின் விபரம் | | |
| 2. | பெயர் | முனியசாமி |
| 3. | த/பெ. | வேலு |
| 4. | தொழில் | -- |
| 5. | முகவரி | மேலக்கிடாரம், கடலாடி தாலுகா |
| 6. | வயது | 30/2021 |
| 3ம் எதிரியின் விபரம் | | |
| 2. | பெயர் | முனியசாமி |



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.30 14:39:22 +0530

| | | |
|---|---|---|
| 3. | க/பெ. | குமரவேலு |
| 4. | தொழில் | -- |
| 5. | முகவரி | எஸ்.மாரியூர், கடலாடி தாலுகா |
| 6. | வயது | 21/2021 |
| | | |
| 7. | சம்பவ நாள் | 11.07.2021ம் தேதி 09.30மணி |
| 8. | புகார் தேதி | 11.07.2021ம் தேதி 12.00 மணி |
| 9. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | 11.07.2021 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | இவ்வழக்கின் 1 முதல் 3 எதிரிகள் 15.07.2021 தேதியிட்ட Crl.M.P.447/2021 உத்தரவுப்படி 16.07.2021ம் நாள் இந்நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார். |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 18-03-2022 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 10.03.2026 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 23.06.2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | 1 முதல் 3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 379ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | 1 முதல் 3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 379ன் கீழ் |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை |
| 16. | அரசு தரப்பு சாட்சிகள் | |

| சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.30 14:39:28 +0530

<table>
<tr><td></td><td></td><td><table>
<tr><td>அ.சா.1</td><td>10.03.2026</td><td>10.03.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>10.03.2026</td><td>10.03.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>19.05.2026</td><td>19.05.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>09.06.2026</td><td>09.06.2026</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>23.06.2026</td><td>23.06.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>17.</td><td>எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>30-06-2026</td></tr>
<tr><td>18.</td><td>எதிரிகள் தரப்பு சாட்சிகள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>19.</td><td>எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>20.</td><td>எதிரிகள்/ குற்றமுறையீட்டாளர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>குற்றமுறையிடுவோர் தரப்பில் 311 Cr.P.C பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற M.P.No.13/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 23.06.2026ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>21.</td><td>எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>22.</td><td>அரசு தரப்பு வழக்கறிஞர்</td><td>திரு.J.ஆலன்ராயன்</td></tr>
<tr><td>23.</td><td>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்</td><td>திரு.G.சரவணன்</td></tr>
<tr><td>24.</td><td>எதிரிகளின் கூற்று</td><td>எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய்</td></tr>
</table>



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.30 14:39:35 +0530

| | | |
|---|---|---|
| | | வழக்கு என்று கூறினார்கள் |
| 25. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 30-06-2026 |
| 26. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 30-06-2026 |
| 27. | நீதிபதியின் முடிவு | முடிவாக, 1 முதல் 3 எதிரிகள் இதச பிரிவுகள் 379ன் கீழ் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார்கள். எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் சி.பி. எண். 35/2022 dt. 11.03.2022ல் கண்ட வழக்குச் சொத்தான ரூ.8,000/- மதிப்புள்ள மஞ்சள் மற்றும் கருப்பு நிறம் கலந்த செம்மறி ஆட்டுக் கிடாய்கள் இரண்டை நிகர்நிலை புகார்தாரர் வழக்குச் சொத்தை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுச் சென்றுள்ளார். தொடர்ந்து வழக்குச் சொத்தை அவரே வைத்துக் கொள்ளவும், மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டு உத்தரவுப்படி செயல்படவும் உத்தரவிடப்படுகிறது.<br><br>அ.சா.பொ.1 ஆன TN 67 AU5938 பஜாஜ் பல்சர் இரண்டு சக்கர வாகனம் மற்றும் அ.சா.பொ.2 ஆன TVS அப்பாச்சி இரண்டு சக்கர வாகனத்தை அதன் உரிமையாளர் உரிய ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் |



THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.06.30 14:39:41 +0530

| | | |
|---|---|---|
| | | மனு செய்து பெற்றுச்செல்ல உத்தரவிடப்படுகிறது. யாரும் உரிமை கோராத பட்சத்தில் அரசுடைமையாக்க உத்தரவிடப்படுகிறது. மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டு உத்தரவுப்படி செயல்படவும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. |

இந்த வழக்கு 18–03–2022ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 30–06–2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 திரு.J.ஆலன்ராயன் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. திரு.G.சரவணன் அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று **(30–06–2026)** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**<u>தீர்ப்புரை</u>**

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : –**

(I) கடந்த 11.07.2021ம் தேதி வாதியானவர் ஊருக்கு வடக்கே உள்ள தர்மலிங்கம் என்பவரின் வயலில் கிடை போட்டிருந்த சமயம் வழக்கின் எதிரிகள் அங்கு TN 67 AU 5938 என்ற பதிவெண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனம் மற்றும் பதிவெண் இல்லாத கருப்பு சிகப்பு வெள்ளைநிறம் கலந்த TVS Appachi இருசக்கர வாகனம் ஆகியவற்றில் வந்து வாதிக்கு சொந்தமான ஆடுகளில் சுமார் ரூ.8,000/– மதிப்பிலான இரண்டு செம்மறிகிடா ஆடுகளை

திருடிச்சென்ற குற்றத்திற்காக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 379 ன் கீழ் சாயல்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

(ii) குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகள் பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு குவிமுச பிரிவு 207 ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

((iii) போதிய கால அவகாசத்திற்கு பின் 01.08.2024ம் தேதியன்று எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச. பிரிவு. 240(1) ன் படி எதிரிகள் மீது இதச பிரிவுகள் 379 ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு. 240(2) ன் படி எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச. பிரிவு. 242–ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

(iv) குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.5** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10** வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆகிய சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.30 14:39:53 +0530

**அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்**

(I) அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.5 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.1 முதல் 4 வரையிலான சாட்சிகள் பிறழ்சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.5 சாயல்குடி காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் சார்பு ஆய்வாளர் திரு.சரவணன் என்பவரது கையொப்பம் நன்கு பரிட்சயம் என்றும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாக கூறி சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. சரவணன் அவர்கள் 11.07.2021ம் தேதி 12.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது அ.சா.1 அளித்த புகார் மனுவைப் பெற்று நிலையக் குற்ற எண்.291/2021 இதச பிரிவுகள் 379ன் வழக்கு பதிவு செய்தும், அன்றே சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சம்பவயிட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், 1ம் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகளிடமிருந்து வழக்குச் சொத்தை அத்தாட்சியில் கைப்பற்றியும், கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை படிவம் –91ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்ததாகவும், புலன்விசாரணை முடித்து இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து குவிமுச.313(1)(ஆ) பிரிவின் படி கேள்விகள் கேட்க எதிரிகள் சாட்சியங்களை பொய் என்றும், தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் பேரில் எதிரிகள் தரப்பில் சாட்சியம்



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.30 14:40:00 +0530

முடிக்கப்பட்டது.

<u>**தீர்வுக்குரிய பிரச்சனை :—**</u>

எதிரிகள் மீது இதச பிரிவுகள் 379 ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபித்துள்ளதா?

அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிகளுக்கு கிடைக்ககூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

இரு தரப்பும் வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**அரசு தரப்பு வழக்கினை எதிரிகளுக்கு எதிராக நிரூபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:—**

(i) அ.சா.1ன் சாட்சியத்தின்படி 2021ம் வருடம் அ.சா.1னிடம் 20க்கும் மேற்பட்ட செம்மறி ஆடுகள் இருந்ததால் தர்மலிங்கம் என்பவரது தோட்டத்தில் கிடை போட்டுள்ளார், 11.07.2021ம் தேதி காலை நேரத்தில் அந்த ஆட்டுக்கிடை அருகே அ.சா.1 மற்றும் அ.சா.2, முனீஸ்வரன், முகேஷ் ஆகியோர் பேசிக்கொண்டிருந்த போது யாரோ அடையாளம் தெரியாத 3 நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து ஆடுகளை திருட முயற்சித்துள்ளார்கள். அவர்களை பார்த்து அ.சா.1ம் மற்ற நபர்களும் சத்தம் போட்டவுடன் அந்த நபர்கள் அங்கிருந்து சென்றுள்ளார்கள். அ.சா.1ன் ஆடுகள் எதுவும் திருடு போகவில்லை. போலீசார் அ.சா.1னிடம் வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.1ன் சாட்சியத்தில் இருந்து அவரது ஆடுகள் திருடு போகவில்லை என்றும், போலீசார் வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றதாக கூறியதால் புகார் மனு நம்பத்தகுந்த ஆவணம் அல்ல என இந்நீதிமன்றம் முடிவு



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.30 14:40:05 +0530

செய்கின்றது.

சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக சேர்க்கப்பட்ட அ.சா.2ம் அ.சா.1ன் சாட்சியத்தை அனுசரித்து கூறியதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். இவரது சாட்சியமும் அரசு தரப்பிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.சரவணன் என்பவருக்காக ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளித்த சார்பு ஆய்வாளர் திரு.முருகன் (அ.சா.5) ன் சாட்சியத்தில் 11.07.2021ம் தேதி 12.00 மணிக்கு அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று குற்ற எண். 291/2021 இ.த.ச பிரிவுகள் 379ன் கீழ் வழக்கு பதிவு செய்து சம்பவம் இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.சா.ஆ.7) மற்றும் மாதிரி வரைபடத்தை (அ.சா.ஆ.8) சார்பு ஆய்வாளர் திரு.சரவணன் தயார் செய்ததாக கூறியுள்ளார். ஆனால் பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அசா.3ன் சாட்சியத்தில் போலீசார் தன்னிடம் வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றதாக கூறியுள்ளார். எனவே அ.சா.5 கூறியபடி சம்பவ இடத்தில் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆவணங்கள் தயார் செய்யப்பட்டதா என்பதும், சந்தேகத்திற்கு இடமாகவே உள்ளது.

மேலும் அ.சா.5ன் சாட்சியத்தில் 11.07.2021ந் தேதி 15.00 மணிக்கு மாரியூர் கடற்கரை அருகே எதிரிகளை கைது செய்து அவர்களில் 1ம் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து 16.15 மணிக்கு மாரியூர் கடற்கரை அருகே உள்ள பனங்காட்டில் இருந்து வழக்குச்சொத்தான ஆட்டுக்கிடாய்கள் இரண்டையும் TN 67 AU 5938 பஜாஜ்



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.30 14:40:11 +0530

பல்சர் இருசக்கர வாகனம் (அ.சா.பொ.1) மற்றும் பதிவெண் இல்லாத TVS அப்பாச்சி (அ.சா.பொ.2) இருசக்கர வாகனம் ஒன்றையும், அத்தாட்சியில் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி வழக்குச்சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்து இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக கூறியுள்ளார். ஆனால் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட அ.சா4 நீதிமன்ற சாட்சியத்தில் போலீசார் தன்னிடம் இரு வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டதாக கூறியுள்ளதால் அ.சா.5 கூறியபடி 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூல அடிப்படையில் சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டதா என்றும், அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. மேலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அ.சா.5ன் சாட்சியத்தால் எவ்வித பலனும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனவே, அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி சாட்சியங்களின் ஆய்விலிருந்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 379ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.

(vii) இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரிகள் இதச பிரிவுகள் 379 ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிகள் குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.30 14:40:17 +0530

செய்யப்படுகிறது.

இவ்வழக்கில் சி.பி. எண்.35/2022 தேதி. 11.03.2022ல் கண்ட வழக்குச் சொத்தான ரூ.8,000/– மதிப்புள்ள மஞ்சள் மற்றும் கருப்பு நிறம் கலந்த செம்மறி ஆட்டுக் கிடாய்கள் இரண்டை நிகர்நிலை புகார்தாரர் வழக்குச் சொத்தை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுச் சென்றுள்ளார். தொடர்ந்து வழக்குச் சொத்தை அவரே வைத்துக் கொள்ளவும். அ.சா.பொ.1 ஆன TN 67 AU5938 பஜாஜ் பல்சர் இரண்டு சக்கர வாகனம் மற்றும் அ.சா.பொ.2 ஆன TVS அப்பாச்சி இரண்டு சக்கர வாகனத்தை அதன் உரிமையாளர் உரிய ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுச்செல்ல உத்தரவிடப்படுகிறது. யாரும் உரிமை கோராத பட்சத்தில் அரசுடைமையாக்க உத்தரவிடப்படுகிறது. மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டு உத்தரவுப்படி செயல்படவும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 30ம் நாள் செவ்வாய்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.30 14:40:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி (மு.கூ.பொ).

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. வேல்மயில் |
| அ.சா.2 | திரு.செல்வா |
| அ.சா.3 | திரு. முருகன் |
| அ.சா.4 | திரு. செந்தூர்பாண்டி |
| அ.சா.5 | திரு. முருகன் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 11.07.2021 | புகார் மனுவில் உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 11.07.2021 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 11.07.2021 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 11.07.2021 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | 11.07.2021 | புகார் மனு |
| அ.சா.ஆ.6 | 11.07.2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | 11.07.2021 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.8 | 11.07.2021 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.9 | 11.07.2021 | ஒப்புதல் வாக்குமூலத்தில உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.10 | 11.07.2021 | அத்தாட்சி |

**அரசு தரப்பு சான்றுபொருள்:–**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | TN 67 AU 5938 பஜாஜ் பல்சர் இரு சக்கர வாகனம் |



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.30 14:40:30 +0530

| | |
|---|---|
| | |
| அ.சா.பொ.2 | பதிவெண் இல்லாத TVS Appachi இரு சக்கர வாகனம் |

**<u>எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u>** இல்லை

**<u>குறிப்பு :–</u>**

1. எதிரிகள் வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.30 14:40:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி (மு.கூ.பொ).